ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka

අති විශෙෂ அதிவிசேஷமானது EXTRAORDINARY

අංක 1093 /8 – 1999 අගෝස්තු 17 වැනි අඟහරුවාද – 1999.08.17

1093 / 8 ஆம் இலக்கம் - 1999 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை

No. 1093 / 8 – TUESDAY, AUGUST 17, 1999


# பகுதி I: தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

எல். டி. – பி 21/78 iv.

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்களின் சட்டம்

### 21 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 21 ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரண ஆகிய யான் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுடனான கலந்தாலோசனையுடன், இக்கட்டளை மூலம் –

(அ) பிரயோக விஞ்ஞானங்கள், தொழில் கற்கை நெறிகள் மற்றும் நிதி, கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட முகாமை அத்துடன் பண்ணை விலங்கு, கடற்றொழில் மற்றும் போசணை ஆகிய கற்கைத் துறைகளில் உள்ள உயர் கல்வியை வழங்குவதற்கான, மேம்படுத்துவதற்கான அத்துடன் அபிவிருத்தி செய்வதற்கான நோக்கத்துக்காக 1999 ஒக்தோபர் முதலாம் தேதியில் இருந்து பல்கலைக்கழகமொன்றைத் தாபிக்கிறேன் ;

(ஆ) அத்தகைய பல்கலைக்கழகத்திற்கு “இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்” என்னும் பெயரையும், மகுடத்தையும் குறித்தொதுக்குகிறேன் ;

(இ) அத்தகைய பல்கலைக்கழகத்தின் அமைவிடம் குருநாகல் நிருவாக மாவட்டத்தில் இருத்தல் வேண்டுமென குறித்துரைக்கிறேன் ;

(ஈ) பிரயோக விஞ்ஞானங்கள், தொழில் கற்கைகள் மற்றும் நிதி, கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட முகாமை அத்துடன் பண்ணை விலங்கு, கடற்றொழில் மற்றும் போசணை என்பவற்றுக்கான பீடங்களைக் குறித்த பல்கலைக்கழகத்திற்கு குறித்தொதுக்குகிறேன் ; அத்துடன்

(உ) இதற்கான அட்டவணையின் நிரை 1 இல் தரப்பட்டுள்ள அத்தகைய பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடமும், இவ்வட்டவணையின் 2 ஆம் நிரையில் தரப்பட்டுள்ள நேரொத்த பதிவில் காணப்படும் கற்கைத் துறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்

றிச்சர்ட் பத்திரண,
கல்வி, உயர் கல்வி அமைச்சர்

கொழும்பு,
1999 ஓகத்து 13.

அட்டவணை

| நிரை 1 | நிரை 2 |
|---|---|
| பிரயோக விஞ்ஞானங்கள் பீடம் | கைத்தொழில் முகாமைத் துறை ;<br>இலத்திரனியல் துறை ;<br>கணித விஞ்ஞானங்கள் துறை ;<br>கணனி மற்றும் தகவல் முறைமைகள் துறை. |
| தொழில் கற்கைகள் மற்றும் நிதிப் பீடம் | கணக்கியல் துறை ;<br>வங்கி மற்றும் நிதித் துறை ;<br>தொழில் முகாமைத் துறை ;<br>காப்புறுதி மற்றும் மதிப்பீட்டுத் துறை. |
| கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட முகாமைப் பீடம் | பெருந்தோட்ட முகாமைத் துறை ;<br>தோட்டப் பயிர்ச்செய்கை மற்றும் தோட்ட வடிவமைப்புக் கலைத்துறை ;<br>வர்த்தக கமத்தொழில் முகாமைத் துறை ;<br>மற்றும் உயிரியல் தொழில்நுட்பத் துறை. |
| பண்ணை விலங்கு, கடற்றொழில் மற்றும் போசணை பீடம் | உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் துறை ;<br>பிரயோகப் போசணைத் துறை ;<br>பண்ணை விலங்கு மற்றும் பறவை விஞ்ஞானங்கள் துறை ;<br>நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் கடற்றொழில் துறை. |